**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 154/2022 D.W.1**

Name:ராஜேஸ்வரி Husband's Name : சுப்பிரமணி
Village: Taluk :
Age : Occupation :
Caste : Religion :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.01.2024

---

**08.01.2024**

**முதல் விசாரணை:**

1) நான் இந்த வழக்கின் எதிரி ஆவேன். எனது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட பின்னர்தான் சாட்சியம் அளிக்கிறேன். எனது ஊர் கருவியப்பட்டி. புகார்தாரரை எனக்கு யாரென்று தெரியாது. எனக்கு நோட்டிஸ் வந்தபோதுதான் தெரியும். நான் புகார்தாரரிடம் ரூ.2 1/4 லட்சம் ரூ.100 க்கு ரூ.1.00 வீதம் வட்டிக்கு கடன் வாங்கியதாகவும், இரண்டு வருட காலமாக ரூ.3 1/4 லட்சம் செலுத்தவில்லை என்று அறிவிப்பு அனுப்பியிருந்தார். நான் பாலையூர் குழுவில் துணை தலைவராக இருந்தேன். மஞ்சுளா என்பவர் அக்குழுவின் தலைவராக இருந்தார். நான் கண்டனூர் ICICI வங்கியில்லோன் வாங்குவதற்காக மஞ்சுளா எனது காசோலைகளை பெற்று வைத்திருந்தார். நான் 100 நாள் வேலை செய்கிறேன். அடிக்கடி வந்து காசோலையை பெற முடியாது என்பதால் காசோலை புத்தகத்தையும்,ஆதார் கார்டு மற்றும் எனது புகைப்படத்தையும் மஞ்சுளாவிடம் கொடுத்து வைத்திருந்தேன்.

2) மஞ்சுளா எனது காசோலைகளை தவறாக பயன்படுத்தி சண்முகம் என்பவரிடம் பணம் பெற்றிருக்கிறார் என்ற விபரம் மஞ்சுளா இறந்த பிறகு தான் எனக்கு தெரியவந்தது. நான் 9 ம் வகுப்பு படித்திருக்கிறேன். என் கணவர் தர்மபுரியில் கோவிலில் சிற்ப வேலை செய்கிறார். மஞ்சுளா

குழுவில் பல நபர்களை இவ்வாறு ஏமாற்றி இருக்கிறார். சாக்கோட்டையில் ஒரு செட்டியார் வீட்டில் திருடியதாக மஞ்சுளா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர் ஜெயிலில் இருந்தார். அவர் வெளியில் வந்தவுடன் காசோலைகள் குறித்து கேட்கலாம் என்று இருந்தோம். பின்னர் மஞ்சுளாவின் கணவர் வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் மஞ்சுளா தற்கொலை செய்து கொண்டார் அதனால்அவரிடம் எந்த விபரமும் எங்களால் கேட்டு தெரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது.

3) என்னைப்போலவே மற்றொரு துணைத்தலைவியான மல்லிகா காசோலையையும் மஞ்சுளா தவறாக பயன்படுத்தியுள்ளார். தற்போது மல்லிகா மீதும் காசோலை வழக்கு பதியப்பட்டுள்ளது. அந்த வழக்கையும் புகார்தாரர்தான் தாக்கல் செய்துள்ளார். இந்த விபரங்கள் எனது பதில் அறிவிப்பில் நான் சொல்லியிருக்கிறேன். அதன் பிறகு மஞ்சுளா இறந்த விபரத்தையும் கூடுதல் பதில்அறிவிப்பு மூலம் தெரிவித்து இருக்கிறேன். எனது பதில் அறிவிப்பினை புகார்தாரரின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டுள்ளார். அதன் நகலை புகார்தாரரும் வாங்கியிருக்கிறார். என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில்இருந்து அனுப்பப்பட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பத்தில் S.ராஜேஸ்வரி என்று தமிழில் செய்துள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதுபோலவே ம.சா.ஆ.4 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான்.

4) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள ஆங்கிலத்தில் செய்யப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. 27.11.2022 என குறிப்பிட்டு 02.06.2023 அன்று அனுப்பப்பட்ட வழக்கறிஞர் **பதில் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுகளுடன் எ.சா.ஆ. 1 ஆகும்.** 25.05.2023 என குறிப்பிட்டு 02.06.203 அன்று அனுப்பப்பட்ட **கூடுதல் பதில்அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் எ.சா.ஆ. 2 ஆகும்.** மேற்படி அறிவிப்பை புகார்தாரரின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் (எண்ணிக்கை**

2) **எ.சா.ஆ. 3 மற்றும் எ.சா.ஆ. 4 ஆகும்**. மஞ்சுளா மீது சாக்கோட்டை காவல் நிலையத்தில் பதியப்பட்ட வழக்கின் **முதல் தகவல்அறிக்கை சான்றிட்ட நகல் எ.சா.ஆ. 5 ஆகும்.** மேற்படி மஞ்சுளா மீது தாக்கல் செய்யப்பட்ட **குற்ற இறுதி அறிக்கை எ.சா.ஆ.6 ஆகும்.** மேற்படி மஞ்சுளா தற்கொலை செய்து கொண்டதற்காக **பதியபட்ட புகார்மனு மற்றும் முதல் தகவல்அறிக்கை சான்றிட்ட நகல் எ.சா.ஆ. 7 ஆகும். மஞ்சுளாவின் இறப்பு சான்றின் நகல் கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது எ.சா.ஆ.8 ஆகும்.** இவ்வழக்கிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் புகார்தாரரிடம் பணம் வாங்கவில்லை அதற்காக காசோலையை கையொப்பம் செய்தும் கொடுக்கவில்லை. என்னை விடுதலை செய்யுமாறு வேண்டுகிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.